# திருப்பெரும்புதூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை : திருமதி.பி.சி.ஹேமலதா.,எம்.இ.,

ந.க.எண்.899/2024/எப்1 நாள்.22.04.2025

பொருள்:- மனைப்பிரிவு – திருப்பெரும்புதூர் நகராட்சி – திருப்பெரும்புதூர் 'ஆ' கிராமம் – சர்வே எண்.906/3D1,906/3E1,906/75-ல் 2390.00 ச.மீ பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:-
1) துணை இயக்குநர் (பொ), நகர் ஊரமைப்பு துறை அவர்களின் கடித ந.க.எண்.F3MJVM95/2024/TCP நாள்.20.09.2024
2) திருப்பெரும்புதூர் சார்பதிவாளர் அவர்கள் அலுவலகத்தில் மனுதாரரர் தானமாக சாலை இடத்தினை பதிவு செய்த தான பத்திரம் எண்.10498/2024, நாள்.11.09.2024.
3) நகர்மன்ற தீர்மானம் எண்.447, நாள்.22.11.2024.

*******

**உத்தரவு :-**

திருப்பெரும்புதூர் நகராட்சிக்குட்பட்ட **திருப்பெரும்புதூர்** 'ஆ' கிராமம் சர்வே எண். 906/3D1,906/3E1,906/75-ல் 2390.00 ச.மீ நிலப்பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வேண்டி M/s Sree Balaji Properties Rep by Mr.R.Venkatesan என்பவரால் நகர் ஊரமைப்பு துறைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி மனுதாரின் விண்ணப்பம் துணை இயக்குநர்(பொ), நகர் ஊரமைப்பு துறை காஞ்சிபுரம் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 1-ல் காணும் கடிதத்தின் படி அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலை அமைப்பு வரைபடத்தின் படி, சாலை இடத்தினை திருப்பெரும்புதூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பார்வை 2-ல் கண்டுள்ளபடி M/s Sree Balaji Properties Rep by Mr.R.Venkatesan என்பவர் பத்திர பதிவு செய்து திருப்பெரும்புதூர் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்துள்ளார். தான பத்திர எண்.10498/2024 நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் உத்திரவில் மனைப்பிரிவிற்கு ந.க.எண்.F3MJVM95/2024/TCP நாள்.20.09.2024 திட்ட அனுமதி எண்.112/2024 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பார்வை 3-ல் காணும் நகரமன்ற தீர்மானத்தின் படி மேற்கண்ட குடியிருப்பு மனைகளுக்கு மன்றம் அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | கட்டண விவரம் | தொகை ரூ | ரசீது எண்/நாள் |
|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு கட்டணம் | 15,000/- | 03/2025-2026<br>21.04.2025 |
| 2 | ஆய்வு கட்டணம் | 10,000/- | |
| 3 | குடியிருப்பு மனை கட்டணம் | 3,000/- | |
| 4 | கூர்ந்தாய்வு கட்டணம் | 15,000/- | |
| 5 | அபிவிருத்தி கட்டணம் | 10,000/- | |
| 6 | நிலப்பயன்பாட்டு கட்டணம் | 2,32,000/- | அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது |
| 7 | மனைப்பிரிவின் பராமரிப்பு வைப்புத்தொகை கட்டணம் | 1,00,000/- | 02/2025-2026<br>21.04.2025 |
| 8 | காலிமனை வரி | 71,315/- | 01/2025-2026<br>21.04.2025 |
| 9 | சிறுபாலம் அமைத்தல் | 4,00,000/- | 03/2025-2026<br>21.04.2025 |
| 10 | குடிநீர் குழாய் அமைத்தல் | 80,000/- | |
| 11 | மின்கம்பம் அமைத்தல் | 65,000/- | |

## நிபந்தனைகள்

1 நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் திட்ட அனுமதி எண். .112/2024, நாள். 20.09.2024 -ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும்.

2 இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட இடங்களில் எக்காரணத்தை கொண்டும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.

3 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநரால் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி மனைகள் பிரித்து மாற்றம் செய்யாமல் விற்பனை செய்தல் வேண்டும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும்.

4 மனைப்பிரிவு தொடர்பான இடத்தில் (புலஎண்ணில்) உரிமை பிரச்சினை வருமேயானால் தாங்களே சிவில் / குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ளவேண்டும். எந்த சூழ்நிலையிலும் நகராட்சி, நகர் ஊரமைப்பு துறை பொறுப்பேற்காது.

5 தவறான ஆவணம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது பின்னர் தெரியவந்தால் எந்த நேரத்திலும் வழங்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்படும்

6 நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி-2, நாள்.20.10.2022-ன்படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்தபின் இவற்றில் எது அதிககாலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/ மனைப்பிரிவு உரிமையாளரைச் சாரும்.

எனவே, மேற்கண்ட இடத்தில் M/s Sree Balaji Properties Rep by Mr.R.Venkatesan என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மேற்காணும் நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

22.4.2025

ஆணையாளர்

திருப்பெரும்புதூர் நகராட்சி

**பெறுநர்:-**

Sree Balaji Properties Rep by Mr.R.Venkatesan,
No.B.1, 699/700 Kumbhat Complex,
Poonamallee High Road, Amaidakarai,
Chennai – 600 029

22.4.'25

22.4.25

**நகல் பணிந்தனுப்படுகிறது:-**

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், காஞ்சிபுரம்